

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் அமைச்சர் பெருமக்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் 15.1.2024 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றார்.





பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னெடுப்பில் நடைபெற்று வரும் "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" நிகழ்ச்சியில் 1500 நாட்டுப்புற கலைஞர்கள் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளை நடத்திவரும் நிலையில், 16.01.2024 செவ்வாய்க்கிழமை – அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தில் சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள நாட்டுப்புற கலைஞர்களுடன் பொங்கல் விழா கொண்டாடி, அவர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தாடைகளை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் காந்தி, கலை பண்பாட்டுத்துறை இணை இயக்குநர் சிவசௌந்திரவல்லி, கலை பண்பாட்டுத்துறை துணை இயக்குநர் ஹேமநாதன், மக்கள் தொடர்பு அலுவலர்கள் பதி, பிரைட் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.